வாய்ப்பு வசதிகள் ஏற்படும். ஆகவே பள்ளி நடந்துவருகிற காரணத்தாலும் அந்த ஆசிரியருடைய முறையீடு கவனிக்கப் படுகிற காரணத்தாலும் இதை மேலும் விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப்பிறகு இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கான அவசியம் இல்லை என்று கருதுகிறேன். ஆகவே, இந்தத் தீர்மானத்திற்கான அனுமதி மறுக்கப்படுகிறது.

4. கவன ஈர்ப்பு

சிங்கநல்லூர் நகராட்சி பள்ளி ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்கப் படாமை குறித்து

MR. SPEAKER : Now the hon. Member ,Thiru N. Dennis will call the attention of the Hon. Minister for Education and Local Administration to a matter of urgent public importance.

THIRU N. DENNIS : Sir, I wish to call the attention of the Hon. Minister for Education and Local Administration to a matter of urgent public importance, namely, the non-payment of salary to the teachers of the Singanallur Municipal Schools from November 1971 onwards causing them inconvenience.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சிங்காநல்லூர் நகராட்சியில் ஆரம்பக் கல்விக் கணக்கில் ஏற்பட்டுள்ள பற்றுக் குறையினை ஈடு செய்யும் வகையில் 1966-67 முதல் 1969-70 வரைக்கான ஆண்டுகளுக்கு பற்றுக்குறை உதவித்தொகை அளிக்கக் கோரி வேண்டுகோள் அரசுக்கு அனுப்பப்பட்டது. அரசு மாநில தலக்கணக்காயரின் உதவியுடன் இப்பிரச்னையை ஆராய்ந்ததில் சிங்கநல்லூர் நகராட்சியானது அரசின் உதவித் தொகையினைப் பெறும் தகுதியை இழந்துள்ளது என முடிவெடுத்துள்ளது. இந் நகராட்சியின் நிதிநிலைமை ஆராய்ந்ததில் இந்நகரவையின் பொதுக் கணக்கு மிகக் கூடுதலாக இருப்புடனேயே இவ்வாண்டு களில் முடிந்திருக்கிறது. இந்நகராட்சி கூடுதலாக பொதுக் கணக்கிலிருந்தே இப்பற்றுக் குறையினை நிறைவு செய்திருக்கலாம்.

மேலும் சமீபத்தில் அரசாணை எண். 1766 கல்வி 14—10—1971-ல் அரசு இந்நகராட்சிக்கு ரூ. 1,23,852. (ஒரு இலட்சத்து இருபத்தி மூன்றாயிரத்து எண்ணூற்று ஐம்பத்து இரண்டு ரூபாய்) 1971-72-ஆம் ஆண்டுக்கு முன்னுதவித் தொகை அளித்துள்ளது. இதில் கல்வி வரி மட்டுமே ஒன்றேகால் இலட்சம் வரி பாக்கியுள்ளது. இந்த பாக்கி வரி ஒன்றேகால் லட்சம் ஒழுங்காக வசூலிக்கப்பட்டிருந்தால் இந்த நெருக்கடி இந்த நகரவைக்கு ஏற்பட்டிருக்காது எனக் கருதப்படுகிறது. டிசம்பர் மாதச் சம்பளம் மட்டுந்தான் இன்றும் கொடுக்கப்படவில்லை என்றும். இதில் ரூ. 50 மட்டும் முன் பணமாகக் கொடுக்கப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

(The hon. Member Thiru A. Subramaniam rose.)

1972 பிப்ரவரி 1]

MR. SPEAKER : You may represent Singanallur constituency. But according to our Assembly Rules, only the hon. member who has given call attention notice under Rule 41, can put questions and elicit some information.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தனிப்பட்ட முறையில் சில மெம்பர்களுக்குக் காட்டும் சலுகைப்போல் எனக்கும் கொஞ்சம் அனுமதி கொடுங்கள்.

MR. SPEAKER : That does not confer any right on you to put questions simply because you are from Singanallur.

கால் அட்டன்ஷன் நோட்டீஸ் கொடுத்திருப்பவர் கன்னியாகுமரியைச் சேர்ந்த மெம்பர். ஏதாவது கேட்கவேண்டுமானல் அவர்தான் கேட்கலாம். நீங்கள் சிங்காநல்லூரைச் சேர்ந்தவராக இருப்பினும் நமது சட்டமன்ற விதிகளின்படி நீங்கள் இதில் இப்பொழுது பேசமுடியாது. அமைச்சரிடம் ஏதாவது இதுபற்றி கேட்கவேண்டும் என்று நினைத்தால், அமைச்சரின் அறையில் போய் தனிப்பட்ட முறையில் கேட்டுக்கொள்ளலாம்.

5. அரசினர் தனித்தீர்மானங்கள்.

(அ) 1971-ஆம் ஆண்டு அரசியலமைப்பு (25-வது திருத்த) சட்ட முன்வடிவினல் செய்யக் கருதப்பட்டுள்ள திருத்தங்களை உறுதிப்படுத்தல்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தனித் தீர்மானத்தை முன்மொழிகின்றேன் :

"பாராளுமன்ற அவைகள் இரண்டிலும் நிறைவேற்றப்பட்டு, 1971-ம் ஆண்டு அரசியல் அமைப்பு (25-வது திருத்த) சட்ட முன் வடிவினல் செய்யக் கருதப்பட்டுள்ளவையும், இந்திய அரசியல் அமைப்பின் 368-வது பிரிவின் (2) பகுதியின் வரம்பு நிபந்தனையின் நோக்கத்தின்கீழ் வருபவையுமான திருத்தங்களை இப்பேரவை இசைவுடன் உறுதிப்படுத்துகிறது."

மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசமைப்புச் சட்ட (இருபத்தைந்தாவது திருத்த) முன்வடிவு 1971-ஆம் ஆண்டின் இறுதியில் நாடாளுமன்றத்தின் ஈரவைகளாலும் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதனை தமிழ்நாடு சட்டமன்றமும் ஏற்று உறுதி செய்ய வேண்டுமென்ற தீர்மானத்தை முன்மொழிந்துள்ளேன்.

அரசமைப்புச் சட்டத்தில் இந்தத் திருத்தத்திற்கான தேவையினை விளக்கிக் கூற விழைகின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பொது நலனுக்கென ஒருவரது சொத்தினைக் கட்டாயமாக எடுத்துக்கொள்ளுவதென்றால் அதற்கான இழப்பீட்டுத் தொகையை அறுதியிட்டோ அல்லது அத்தொகை எந்தக்